ஓம் சரவணஜோதியே நமோ நம

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

16.04.2026

1. கந்தனை போற்றி அரங்கன் யானும்
கருணை கொண்டு உலக மக்கட்கு
வந்ததொரு பராபவ புத்தாண்டிலே
வளமும் ஞான பலமும் பெற வேண்டி

2. வேண்டியே குருவார அருளாசியாக
விளம்புவேன் பராபவ தகர் திங்கள்
உண்டான முதல் குருவார ஆசியாக
உலகோர் அரங்கனென் மார்க்கம் வர

3. வருகவே இந்தவித தமிழ் புத்தாண்டில்
வறுமை கஷ்டங்கள் விலகி
தருமம் செய்கின்றபடி சக்தியும்
தனக்குள் பக்குவமும் ஆற்றலும் பெருகும்

4. பெருகியே அரங்கனென் குடிலில்
பூரண முழுமதி பூசை தோறும்
வருகை புரிகின்ற வாய்ப்புடன்
வல்லமையான தொண்டும் செய்து

5. செய்துமே ஞான வழி பிசகா
சிறப்பறிவும் கண்டு திளைப்பர்
அய்யமின்ற பிரணவக் குடிலில்
அன்னதானம் வகை பொருள் உதவி

6. உதவி செய்தும் தொண்டனாக
உலகில் தருமபலம் கூடிடுவர்
பதவி யோகம் தேட்டு தனவிருத்தி
பாதுகாப்பு அனைத்திலும் உருவாகி

7. ஆகியே சர்வபலம் அடைவர்
ஆன்மீகம் கலந்த அரசியல்
செகத்தில் களம் கண்டுமே
சித்திமிக்க அன்பர்கள் ஆளும்

8. ஆளும் மாற்றங்களும் அடைவர்
அநீதி வகை பொருள் பற்றில்
ஆளுமை கொண்டு சேர்த்த
ஆஸ்தி பலம் இழந்துமே

9. இழந்துமே தரும வழிக்கு வந்து
எதிர்மறையானவரும் மாறுவர்
களங்கமற அரங்கன் என்
கண்ணியமிக்க ஞானப்படைகள்

10. படைகள் உலகளாவிய தர்மம்
பழுதின்றி செய்து வருதலுற
தடைகளை வென்று வருமுலகில்
தரும ஞான ஆட்சி மலரும்

11. மலரும் ஞானவான்கள் கூடிய
மக்கள் சபையாக மாறி
வளரும் தரும ஞான வழிகள்
வழங்கிய அரங்கனென் குருவார அருளாசி முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி